பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 21 ஞாயிற்றுக்கிழமை 07.11.2021 கதிர் 230

## சீரற்ற காலநிலையால் ஐவர் பரிதாப மரணம்!


இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களில் சிக்கி இதுவரையில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. ☞2

## பொலிஸ் நிலையம் ஒன்றில் 10 அதிகாரிகளுக்குத் தொற்று



மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பொலிஸ் நிலையத்தில் சேவையாற்றும் 10 பொலிஸ் அதிகாரிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் குடாஓயா மேலதிக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம். தனபால தெரிவித்துள்ளார். ☞2

## சிறுவர் இல்லத்தில் 32 பேருக்குக் கொரோனா



பதுளை, பண்டாரவளையிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் ஐந்து வயதுக்குக் குறைந்த 27 பேர் உள்ளிட்ட 32 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பண்டாரவளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டீ.எம்.ஆர். திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுவர் நிலையத்தில் சிறுவர்களைப் பராமரிக்கும் ஊழியர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்களாக 52 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளான 32 பேரும் வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ், சிறுவர் இல்லத்திலேயே ☞2

## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, கண்டி, குருநாகல், காலி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## மேல் மாகாணத்தில் 1,019 பேர் சிக்கினர்

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட திடீர் பொலிஸ் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 1,019 பேர் கைதாகியுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் உத்தரவுக்கமைய, நேற்றுக் ☞2

### மக்களின் பொறுப்பற்ற நடவடிக்கையால்

# தொற்றாளர் அதிகரிப்பு; மீண்டும் பயணத் தடை?

### எச்சரிக்கின்றது சுகாதாரத் தரப்பு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனச் சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். கடந்த சில வாரங்களாக நாளாந்தம் 500 தொடக்கம் 600 வரையான கொரோனாத் தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில், கடந்த இரண்டு நாள்களாக அந்த எண்ணிக்கை 600 ஐக் கடந்துள்ளது ☞2



## சிவயோகன் காலமானார்!

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் இன்று காலை காலமானார்.

துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த இவர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டி கிளையின் செயலாளராவார்.

இறுதிக்கிரியைகள் நாளை காலை 10.30 மணியளவில் துன்னாலை கோவிற் கடவையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

## விடத்தல் தீவுக்குள் புகுந்தது கடல் நீர்!

### 3 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிப்பு



(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் நிலவும் தொடர் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு பிரதேசத்துக்குள் கடல் நீர் ☞2

## சுழிபுரத்தில் கிணற்றில் மூழ்கி மாணவன் சாவு!

(ந.லோகதயாளன்)

பாடசாலைக்குச் சிரமதானம் செய்யப்போகிறேன் எனக் கூறி விட்டுச் சென்ற மாணவன், நண்பர்களுடன் கிணற்றில் நீந்தியபோது அதில் மூழ்கியுள்ளார். நண்பர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்களால் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார். ☞2

# தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### பொகவந்தலாவை நகரில் விண்ணதிரக் கோஷம்





அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், வரவு - செலவுத்திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் நுவரெலியா மாவட்டத்தின் பொகவந்தலாவை நகரில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சீரற்ற காலநிலையால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் தொடரும் மழையுடன் கூடிய காலநிலையால், 12 மாவட்டங்களில் 1,143 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 391 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பொலிஸ் நிலையம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றுக்குள்ளான அதிகாரிகளில் பொலிஸ் கான்ஸ்டபிள் உள்ளிட்ட அதிகாரிகளும் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

10 பொலிஸ் அதிகாரிகளும் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் குடாஓயா மேலதிக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர் இல்லத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## மேல் மாகாணத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 468 பேரும், ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 393 பேரும் மற்றும் வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட 70 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## விடத்தல் தீவுக்குள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்துள்ளது.

இதனால் விடத்தல் தீவு பிரதேசத்தில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, விடத்தல் தீவில் மீனவர்களின் படகுகள் சில சேதமடைந்துள்ளன எனவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், விடத்தல் தீவு பிரதேசத்துக்குச் சென்று நிலைமையை அவதானித்ததோடு, பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார்.

மேலும், உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வினவியதோடு, உரிய கிராம அலுவலரைச் சந்தித்து பாதிப்பு தொடர்பாகவும் அறிந்துகொண்டார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## தமிழ் முற்போக்குக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம் எம்.பி., வீ.இராதாகிருஷ்ணன் எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், எம்.பிக்களான வேலுகுமார், உதயகுமார் ஆகியோரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, பொகவந்தலாவை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் இன்று மூடப்பட்டிருந்தன.

அத்தியாவசியப் பொருள்களின் விலையை உடனடியாகக் குறைக்க வேண்டும், வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் வேண்டும் போன்ற கோஷங்களை விண்ணதிர எழுப்பியவாறும், அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## சுழிபுரத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூளாயைச் சேர்ந்த பிரபாகரன் ரஜீவன் (வயது - 18) என்ற மாணவனே நேற்று இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம், திக்கரைப் பகுதியிலுள்ள கிணற்றிலேயே நண்பர்களுடன் இணைந்து மேற்படி மாணவன் நீந்தியுள்ளார்.

திடீரென அவர் மூழ்கத் தொடங்கியதும், நண்பர்கள் அயலில் உள்ளவர்களை அழைத்துள்ளனர். அவர்கள் மாணவனை மீட்டு மூளாய் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

## தொற்றாளர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்படுமாக இருந்தால் மீண்டும் பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாட்டை தளர்த்திய பின்னர் மக்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்கின்றனர் எனவும், இதனால் தொற்று நிலைமை மீண்டும் அதிகரிக்கும் நிலைமை உருவாகியுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கந்த சஷ்டி விரத புண்ணிய காலத்தில் நாவலர் மண்டபத்தில் இசை அர்ச்சனை





இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கந்தசஷ்டி விரத புண்ணிய காலத்தில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், மாலை 3.00 மணி தொடக்கம் 4 மணி வரை முருக பக்திப் பாடல்கள் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

முதலாம் நாள் நிகழ்விலே, இசைக் கலைமாணி, பண்ணிசைக் கலாவித்தகர், சங்கீத கலாவித்தகர் செல்வி சந்திரிகா கணேஸ்பரனும் கலாவித்தகர் ஹிமாலினி சுகந்தனும் இணைந்து வழங்கிய 'திருமுருக கீர்த்தனம்' நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது. அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம் – கலாவித்தகர் கிருபா அனந்தகோபனும்; வயலின் – கலாவித்தகர் திருமதி வனஜா ஈஸ்வரசர்மாவும் கெஞ்சிரா – ஸ்ரீ டிலுக்சனும் பங்குபற்றியிருந்தனர்.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்னொரு முடக்கம் வரலாம்!

கொரோனாத் தொற்றிலிருந்து நாடு விடுபட்டு மீண்டும் சுமூகமான நிலையை நோக்கி நகரும் இந்தச் சந்தர்ப்பத்தில் திரும்பவும் தொற்று பரவல் பற்றிய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு இருக்கின்றன. மக்கள் சுகாதார ஒழுங்கு விதிமுறைகளை சரிவர பின்பற்றாத நிலையில் மீண்டும் தொற்றுப் பரவல் ஏற்படலாமென்று கடுமையாக எச்சரிக்கப்படுகிறது.

இலங்கையில் கொவிட் வைரஸ் பரவல் நான்காவது அலை திரிவடைந்த டெல்டா வைரஸினால் ஏற்பட்டது என்பது முக்கிய விடயமாகும். தற்போது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் திரிவடைந்த டெல்டா வைரஸின் மேலும் பல திரிவுகள் அல்லது விகாரங்கள் புதிதாக கண்டறியப்பட்டிருக்கின்றன. அவை இலங்கை யில் புகுவதற்கான ஆபத்துக்கள் அதிகம் இருக்கின்றன என கூறப்படுகின்றது. இலங்கையின் கேந்திர அமைவிடம், அது தற்போது சர்வதேச போக்குவரத்துக்குத் தாராளமாகத் திறந்து இருக்கின்றமை போன்றவற்றை நோக்குகையில் வெளிநாடுகளில் இனங்காணப்பட்ட புதிய வைரஸ் திரிவுகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான ஆபத்துகள் தற்கால சூழ்நிலையில் உச்சமாக இருக்கின்றன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஆபத்தை சமாளிப்பதற்கு மக்கள் எச்சரிக்கை நடவடிக்கைகளை முழு அளவில் கடைப்பிடிக்க வேண்டும். அத்தோடு மூன்றாம் கட்ட செயல் ஊட்டி தடுப்பூசிகளை விரைந்து மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள இரண்டு கட்டத் தடுப்பூசிகளின் வைரஸ் எதிர்ப்பு திறன் எவ்வளவு காலம் வரை நீடிக்கும் என்பது குறித்து இன்னமும் திட்டவட்டமான ஒரு முடிவு காணப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் மூன்றாம் கட்ட செயல் ஊட்டி தடுப்பூசியை வழங்குவது முக்கியமாகின்றது.

நீண்டகால முடக்கத்தில் இருந்து நாடு இப்போது தான் ஓரளவு வழமைக்குத் திரும்பியுள்ளது. இருப்பினும் பழைய இக்கட்டின் தாக்கத்தை மக்கள் மனதில் இருத்தி, இப்போது மிகக் கவனமாக செயல்பட வேண்டும். ஆனால் பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை உரிய முறையில் பின்பற்றாமல் அலட்சியமாக செயற்படுகின்றமையை அவதானிக்க முடிவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவலை தெரிவித்திருக்கின்றது.

போகின்ற நிலையில் கொவிட் வைரஸின் ஐந்தாவது அலை இப்போதைக்கு உருவாகாது என்றோ அல்லது எப்போதும் உருவாகாது என்றோ உறுதி கூறமுடியாது இருப்பதாக மருத்துவர் சங்கம் மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

மீண்டும் ஒரு தொற்றுப் பரவல் மோசமாக ஏற்பட்டால் நாட்டைப் பாதிக்கக்கூடிய நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையில் நாட்டு மக்களும் இல்லை, நாட்டின் பொருளாதாரமும் இல்லை என்பதை சுட்டிக்காட்டும் அந்தச் சங்கம், இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து மக்கள் எச்சரிக்கை உணர்வோடு செயல்படுவது அவசியம் என்று வலியுறுத்தி உள்ளது.

மீண்டும் ஒரு மோசமான பரவலை அல்லது அடுத்த அலையைத் தாங்கும் நிலையில் நாடு இல்லை என்பதை எல்லோரும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

# மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது அவர்களின் எதிர்காலத்துக்கு சிறந்தது

## வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இப்படிக் கருத்து



மக்கள் வெளிநாட்டுக்கு செல்வது பிரச்சினைக்குரிய விடயமல்ல என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் அது அவர்களின் எதிர்காலத்துக்குச் சிறந்ததாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தங்களது வாழ்க்கையை மிகவும் சிறந்ததாக்கவும் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் என்றும் அது தவறான விடயமல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் எப்போதும் அந்த நாடுகளிலேயே வாழ்வதில்லை என்பதோடு, இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்லும் பெரும்பாலானோர் மீண்டும் நாடு திரும்புகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், நாட்டுக்குப் பெருமளவான அந்நிய செலாவணியை அவர்கள் பெற்றுத்தருகின்றனர் எனவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொவிட் தடுப்பு மாத்திரைக்கு இலங்கையில் அனுமதியில்லை

## பரிந்துரைகள் கிடைக்கும் என்கிறார் இராஜாங்க அமைச்சர்

அமெரிக்காவின் மர்க் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் கொவிட் தடுப்பு மாத்திரையை இலங்கையில் பயன்படுத்த இதுவரை இந்நாட்டு சுகாதார அதிகாரிகள் பரிந்துரைகளை வழங்கவில்லை என மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் –

பிரித்தானியாவினுள் பயன்படுத்துவதற்காக மோல்னுபிரவீர் என்ற மாத்திரைக்கு உலகிலேயே முதல் முறையாக பிரிட்டன் ஒப்புதல் அளித்துள்ளது. ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு நான் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தேன். இதனை இலங்கையினுள் பயன்படுத்த முடியுமா? முடியாதா? என பரிந்துரைகளை பெற்றுக் கொடுக்குமாறு தெரிவித்திருந்தேன். எனினும், இதுவரை அந்த விசேட நிபுணர் குழு இதுவரை பரிந்துரைகளை பெற்றுக் கொடுக்கவில்லை. எதிர்வரும் வாரமளவில் குறித்த பரிந்துரைகளை பெற்றுக் கொடுப்பார்கள் என எதிர்ப்பார்க்கிறேன். இது தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கதைத்தேன். விரைவில் இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு இதன்போது கூறினேன். – என்றார்.

# புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் 42ஆவது நிகழ்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நடன அரங்க ஆற்றுகையாளர் செ.ஸ்ரீகண்ணன் யாழ்ப்பாணத்தில் நடனநாடகம் என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார். நன்றியுரையை புத்தாக்க அரங்கஇயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்கள்.

இந்தஇணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் itm ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



# பால்நிலை சமத்துவக் கற்கையை பாடத்திட்டத்தினுள் உள்வாங்குக!

## தமிழ்த் தேசிய முன்னணி மகளிர் அணி முன்மொழிவு

பால்நிலை சமத்துவம்பேணும் கற்கை நெறியை பாடத்திட்டத்தினுள் உள்வாங்குவது தொடர்பான முன்மொழிவொன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணியால் நேற்று (சனிக்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கையளிக்கப்பட்டது.

முன்பள்ளியிலிருந்தே பாடத்திட்டத்தின் மூலம் பால்நிலை சமத்துவம் கற்பிக்கப்படுவதற்கான கருப்பொருளிலமைந்த இம்முன்மொழிவை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகர் மற்றும் மகளிர் அணி செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் மாத்திரையை பயன்படுத்த பிரித்தானியா அனுமதி!




கொரோனா வைரஸுக்கு (கொவிட்-19) எதிராக தயாரிக்கப்பட்டுள்ள மாத்திரையை பயன்படுத்த பிரித்தானிய அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

மோல்னுபிராவிர் எனப்படும் இந்த மருந்தை மெர்க் நிறுவனம் தயாரித்துள்ளது.

மாத்திரை எவ்வளவு விரைவாக கிடைக்கும் என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றாலும், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த மாத்திரையை அங்கீகரித்துள்ள முதல் நாடு என்ற பெருமையை பிரித்தானியா பெற்றுள்ளது.

கொவிட்-19 தொற்றுக்கு நேர்மறை சோதனை செய்த 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வந்தவர்களுக்காக இந்தமாத்திரைஉரிமம்பெற்றது.

லேசானது முதல் மிதமான கொவிட்-19 பாதிப்பு உள்ளவர்கள், வீட்டில் இருப்பவர்கள் ஐந்து நாள்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை எடுத்துக்கொள்ளலாம்.

இதுதொடர்பாக, பிரித்தானிய சுகாதாரத் துறை செயலாளர் சஜித் ஜாவித் கூறுகையில், ‘பலவீனமான மற்றும் நோய் எதிர்ப்பு குறைபாடு உள்ளவர்களுக்கு இந்த சிகிச்சை ஒரு கேம் சேஞ்சர். இன்று நம் நாட்டிற்கு ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள்.

நாங்கள் அரசாங்கம் மற்றும் தேசிய சுகாதார சேவையுடன் இணைந்து ஒரு தேசிய ஆய்வின் மூலம் நோயாளிகளுக்கு மோல்னுபிராவிரை விரைவில் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்கிறோம்’ என கூறினார்.

தடுப்பூசியை விட மாத்திரை தயாரிப்பது எளிது என்பதால், விரைவில் இயல்பு நிலைக்கு திரும்ப முடியும் என நிபுணர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும், தடுப்பூசிக்கு சரியாக பதிலளிக்காதவர்களுக்கு இந்த சிகிச்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற இடங்களில் உள்ள கட்டுப்பாட்டாளர்களிடமும் மோல்னுபிரவீர் மதிப்பாய்வு நிலுவையில் உள்ளது.

நவம்பர் பிற்பகுதியில் மாத்திரையின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை ஆராய சுயாதீன நிபுணர்களின் குழுவைக் கூட்டுவதாக அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் கடந்த மாதம் அறிவித்தது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் 1 கோடி சிகிச்சை மாத்திரைகளை உருவாக்க முடியும் என்று மெர்க் கூறியுள்ளது. ஆனால் அந்த விநியோகத்தின் பெரும்பகுதி ஏற்கனவே உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களால் வாங்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 480,000 மோல்னுபிராவிர் மாத்திரைகளை பெற்றோம் என பிரித்தானிய அதிகாரிகள் அறிவித்தனர்.

மெர்க் மற்றும் அதன் கூட்டாளியான ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக் ஆகியவை கடுமையான நோய் அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஆபத்தில் இருக்கும் லேசான முதல் மிதமான கொவிட்-19 உள்ள பெரியவர்களுக்கு சிகிச்சையளிக்க உலகெங்கிலும் உள்ள கட்டுப்பாட்டாளர்களிடம் மருந்துக்கான அனுமதியைக் கோரியுள்ளன.

# 21 ஆம் நூற்றாண்டின் நீண்ட சந்திர கிரகணம்!



நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நீண்ட சந்திர கிரகணம் நிகழும் என அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது மூன்று மணித்தியாலம், 28 நிமிடங்கள், 23 வினாடிகள் நீடிக்கும் என்றும், இது 21 ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சந்திர கிரகணம் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

இதன்போது, நிலவின் மேற்பரப்பு 97 சதவீதம் சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கும்.

குறிப்பாக வட அமெரிக்க பிராந்தியத்துக்கு இது தென்படும் என்றும், 2100 ஆம் ஆண்டு வரை மீண்டும் இவ்வாறானதொரு நீண்ட சந்திர கிரகணம் நிகழ வாய்ப்பில்லை எனவும் நாசா தெரிவித்துள்ளது.

எதிர்வரும் எட்டு தசாப்தங்களில் மேலும் 179 சந்திர கிரகணங்கள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், சராசரியாக வருடமொன்றில் இரண்டு சந்திர கிரகணங்கள் நிகழும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி இவ்வருடத்துக்கான சந்திர கிரகணம் நிகழும் நிலையில், அடுத்த வருடம் மே 16 ஆம் திகதி மற்றுமொரு சந்திர கிரகணம் நிகழவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் முன்னாள் துணைப் பிரதமர் மீது பாலியல் புகார் குற்றச்சாட்டு



சீன டென்னிஸ் வீராங்கனை பெங் ஷ்வை என்பவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் மீது பாலியல் புகார் தெரிவித்துள்ளார்.

சீனாவைச் சேர்ந்த மூத்த கம்யூனிஸ்ட் அதிகாரி ஒருவர் மீது பாலியல் புகார் வருவது இதுவே முதல் முறை.

முன்னாள் துணை பிரதமர் ஜாங் கவ்லீ அவருடன் பாலியல் ரீதியான உறவு வைத்துக் கொள்ளுமாறு தம்மைத் துன்புறுத்தினார் என்று ஷ்வை தெரிவித்துள்ளார்.

ஜாங் கவ்லீ இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இதுவரை பதிலளிக்கவில்லை. அதிபர் ஷி ஜின் பிங் உடன் நெருக்கமானவராக இவர் அறியப்படுகிறார்.

தற்போது 75 வயதாகும் ஜாங் கவ்லீ 2013-2018 காலகட்டத்தில் சீன துணைப் பிரதமராக இருந்தார்.

பெங் ஷ்வை பொது வெளியில் குற்றம்சாட்டிய பின்னர் அவர் குறித்த இணையத் தேடல்களை சீன அரசு கட்டுப்படுத்தியுள்ளது.

ஜாங் கவ்லீயின் வீட்டுக்குச் சென்றபோது இந்த நிகழ்வு நடந்ததாகவும், அதை நிரூபிக்கத் தம்மிடம் ஆதாரங்கள் இல்லை என்றும் பெங் ஷ்வை கூறியுள்ளார்.



# சீனா 2030ம் ஆண்டுக்குள் 1,000 அணு ஆயுதங்களை வைத்திருக்கும் என பென்டகன் கணிப்பு

*எதிர்பார்த்ததைவிட, அணு ஆயுதங்களை அதி விரைவாக பெருக்கிவரும் சீனா 2030ஆம் ஆண்டுக்குள் 1,000 அணு ஆயுதங்களை வைத்திருக்கும் என அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் கணித்துள்ளது.*

*இதுதொடர்பாக பென்டகன் வெளியிட்ட அறிக்கையில், ‘2027ஆம் ஆண்டுக்குள், 700 அணு ஆயுதங்களை சீனா தயாராக வைத்திருக்கும். 2030ஆம் ஆண்டுக்குள் 1,000 அணு ஆயுதங்களை வைத்திருக்கும். ஓராண்டுக்கு முன்பு கணித்ததைவிட 2.5 மடங்கு அதிக எண்ணிக்கையில் அணு ஆயுதங்களை கொண்டிருக்கும்.*

*நிலம், கடல், காற்று ஆகியவற்றை சார்ந்த அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதிலும் அணு ஆயுத படைகளின் விரிவாக்கத்திற்கு தேவையானஉள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் சீனா முதலீடு செய்துவருகிறது.*

*அமெரிக்க, ரஷ்யா ஆகிய முன்னணி அணு ஆயுத நாடுகளை போன்று அணு ஆயுத முப்படைகளை சீனா கட்டமைத்துவருகிறது. அதாவது,நிலத்திலிருந்துபெரும்தொலைவிற்குப் பாயும் ஏவுகணைகள், வானிலிருந்து பாயும் ஏவுகணைகள், ஆழ்கடலில் இருந்து பாயும் ஏவுகணைகள்ஆகியவற்றைதயாரித்துவருகிறது.*

*சீனாவின் அணு ஆயுத எதிரி நாடுகளில் முதன்மை நாடான அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுத தாக்குதலை மேற்கொள்ளும் திறனை வளர்த்து கொள்ள அந்நாடு முயலவில்லை. ஆனால், மற்ற நாடுகள் தாக்குதல்நடத்தாதவாறும்அப்படி நடத்தப்பட்டால் பின் விளைவுகள் சந்திக்க நேரிடும் என அச்சுறுத்துதல் விடுப்பதற்காகவும் சீனா இப்படி செய்துவருகிறது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனாவின் இராணுவ வளர்ச்சி குறித்த அறிக்கையை அமெரிக்க பாதுகாப்புத்துறை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த நிலையில், சீனாவின் இராணுவ தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*சீனாவிடம் 200 அணு ஆயுதங்கள் தயாராக இருக்கின்றன என்றும் 2030ஆம் ஆண்டுக்குள் இது இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்றும் பென்டகன் ஓராண்டுக்கு முன்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# நீர் வளத்துறை அமைச்சர் கேரளா அரசை கண்டிக்காமல் இருக்கிறார் என்கிறார் ராஜு

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசை கேள்வி கேட்க துணிவின்றி நீர்வளத்துறை அமைச்சர் காமெடி செய்து வருகிறார் என்று அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு விமர்சித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த அவர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கேரள அரசைக் கண்டிக்க முடியாமல் காமெடி செய்து வருகிறார். தன்னிலை மறந்து காழ்ப்புணர்ச்சியோடு அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களையும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி அவர்களையும் விமர்சித்துள்ளார். தி.மு.க. அரசு முல்லைப் பெரியாறு அணைக்கு மட்டும் ஆபத்தை உருவாக்கவில்லை. இது போன்ற ஒரு சூழ்நிலை காவிரி ஆறுப் பிரச்சினையிலும் வரும், கபினி அணையிலும் வரும், என்று தெரிவித்துள்ளார்.

# அமித்ஷா தலைமையில் தென்மண்டல முதலமைச்சர்கள் குழுக்கூட்டம்




ஆந்திர மாநிலம் திருப்பதியில் இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் வரும் 14 ஆம்திகதி தென்மண்டல முதலமைச்சர்கள் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல்வர்களுடன் அந்தமான், இலட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் ஆளுநர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு சார்பாக இந்தக் குழுவில் உறுப்பினராக உள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அல்லது கூடுதல் உறுப்பினர்களாக உள்ள அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொள்ள வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# அருணாசலப் பிரதேச எல்லையில் குடியிருப்பைச் சீனா கட்டியது




தற்போது அருணாசலப் பிரதேசத்திற்கு அருகே, எல்லைத் தகராறு உள்ள பகுதியில் 100 வீடுகள் கொண்ட குடியிருப்பைச் சீனா கட்டியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, லடாக்கில் இரு நாடுகளின் இராணுவ வீரர்களுக்குமிடையே நடந்த மோதலில், 20 இந்தியப் படையினரும், குறைந்தபட்சம் நான்கு சீனப் படையினரும் உயிரிழந்தனர் என செய்திகள் வெளியாகியிருந்தன. சீனாவுடனான எல்லையில் லடாக், அருணாச்சல பிரதேசம், இமாசலப் பிரதேசம், உத்தரகாண்ட் ஆகிய பகுதிகளில் இந்தியா- சீனா நாட்டின் வீரர்கள் மோதும் சூழ்நிலை அவ்வப்போது ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அருணாசலப் பிரதேசத்துக்கும், திபெத் தன்னாட்சி மண்டலத்துக்கு இடைப்பட்ட பகுதி யாருக்குச் சொந்தம் என்பதில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே தகராறு நீடிக்கிறது. இந்தநிலையில், தற்போது அருணாசலப் பிரதேசத்திற்கு அருகே, எல்லைத் தகராறு உள்ள பகுதியில் 100 வீடுகள் கொண்டகுடியிருப்பைச்சீனாகட்டியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் அந்த நாட்டுப் பாதுகாப்புத்துறை அளித்துள்ள ஆண்டறிக்கையில் சீனாவின் இராணுவ மற்றும் பாதுகாப்பு மேம்பாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையிலேயே அருணாசலப் பிரதேசத்தில் எல்லைத் தகராறுள்ள பகுதியில் சீனா 100 வீடுகள் கொண்ட குடியிருப்பைக் கட்டியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சென்னையில் வெள்ளம் பாதித்த பகுதிகளை சென்று பார்வையிட்டார் முதல்வர் ஸ்டாலின்

சென்னையில் இன்று வெள்ளம் பாதித்த பகுதிகளை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

சென்னையில் நேற்று முதல் விடாமல் விடிய விடிய மழை பெய்தது. இந்த மழை இன்று காலையிலும் நீடித்ததால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்ததால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால் நிரம்பி வீதிகளுக்கு மேலே வழிந்தோடியது. பாதாள சாக்கடையும் மழைநீருடன் கலந்து வீதிகளில் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், பல இடங்களில் கறுப்பு நிறத்துடன் தண்ணீர் ஓடியதால் பொதுமக்கள் சாலைகளைக் கடக்க பெரிதும் சிரமப்பட்டனர். வாகன போக்குவரத்தும் பல இடங்களில் ஸ்தம்பித்தது. தொடர்ந்து மழைபெய்த வண்ணம் இருந்ததால் சென்னை நகரமே இன்று காலை ஸ்தம்பித்தது.

இதை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். மாநகராட்சி ஊழியர்கள் வெள்ளத்தை அப்புறப்படுத்தும் பணிகளையும் அவர் ஆய்வு செய்தார். வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் நடந்து சென்றும் பார்வையிட்டார். நிவாரண முகாம்களையும் ஆய்வு செய்தார். அவருடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாநகராட்சி கமிஷனர் ககன் தீப்சிங் பேடி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் உடன் சென்றிருந்தனர்.

# வெளியேறுகிறதா முகேஷ் அம்பானி குடும்பம்? ரிலையன்ஸ் நிறுவனம் அறிக்கை மூலம் விளக்கம்



தொழிலதிபர் முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்பத்தினர் லண்டனில் வசிக்கத் திட்டமிட்டுள்ளனர் என வந்த செய்தியை ரிலையன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது

இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரரும் ரிலையன்ஸ் நிறுவன தலைவருமான முகேஷ் அம்பானி தனது குடும்பத்துடன் மும்பை ஆன்டாலியாவில் வசித்துவருகிறார். இந்த வீடு 4 லட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டது.

27 தளங்களுடன், 173 மீற்றர் உயரம் கொண்ட இந்த வீடு, நில நடுக்கத்தையும் தாங்கும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் இந்தியாவில் பல லட்சம் கோடி ரூபா வர்த்தகத்தை வைத்துள்ள போதிலும் வருடத்தில் பாதி நேரம் மும்பையிலும், பாதி நேரம் லண்டனிலும் தங்க முடிவு செய்துள்ளார் என்றும், சமீபத்தில் மும்பையில் அவரது வீட்டின் முன்னால் வெடிகுண்டுடன் கார் ஒன்று நிறுத்தப்பட்ட சம்பவத்திற்குப் பின்பு முகேஷ் அம்பானி இந்தத் தீர்மானத்துக்குவந்துள்ளார் எனவும் கூறப்பட்டது.

சமீபத்தில் லண்டனின் ஸ்டோக் பார்க் பகுதியில் 300 ஏக்கர் பரப்பு நிலத்தில் 49 பிரமாண்ட அறைகளுடன் பல வசதிகள் உள்ள பங்களாவை 592 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்கிய முகேஷ் அம்பானி, அந்த வீட்டிற்குத்தான் தனது குடும்பத்துடன் செல்லவுள்ளார் எனத் தகவல் வெளியாகியது.

ஆனால், இது குறித்து எவ்விதமான அதிகாரப்பூர்வ அறிவிப்பும் ரிலையன்ஸ் மற்றும் முகேஷ் அம்பானி தரப்பில் இருந்து தெரிவிக்கப்படாத நிலையில், இந்தத் தகவல்களை ரிலையன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது. இந்தச் செய்தி அடிப்படையற்றது என்றும், ரிலையன்ஸ் நிறுவனத் தலைவரும் குடும்பத்தினரும் லண்டனில் அல்லது உலகில் வேறு எங்கும் இடம்பெயரவோ அல்லது வசிக்கவோ எந்தத் திட்டமும் இல்லை என்றும், லண்டனில் ஸ்டோக் பார்க் பகுதியில் வாங்கப்பட்டுள்ள இடம் கோல்ப் மற்றும் விளையாட்டு விடுதியாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் ரிலையன்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 1,500 வீதிகளை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு

சுபீட்ச பாதைப் புரட்டு தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட 1,500 வீதிகளை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வுகள் நேற்றைய தினம் நாடுபூராகவும் இடம்பெற்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கம் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக 100,000 கிலோமீற்றர் வீதிகளை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வேலைகளை பூர்த்தி செய்த 1,500 வீதிகளை ஒரே நாளில் திறந்து மக்கள் உரிமையாக்குதல் செயற்பாடானது நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டது.







# கிழக்கு பல்கலை மருத்துவ பீட மாணவன் எழுதிய ‘ட்ராபிக் லைட்ஸ்’ நூல் வெளியீடு

கல்முனையைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் எஸ்.எல். யுஸ்ரி மபாத் எழுதிய ‘ட்ராபிக் லைட்ஸ் நூல் வெளியீட்டு விழா கல்முனை ஷாகிரா தேசியக்கல்லூரியின் எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் கவிஞரும்ஆசிரியர் செயின் தம்பி சியாம் அவர்கள் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொள்கை பரப்பு செயலாளருமான கே.எம். அப்துல் ரசாக் கலந்துகொண்டமையுடன் தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எச். எம். நிஜாம் மற்றும் கல்முனை ஷாகிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.எஸ். முகமட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நூல்நயத்தல் –நூலின் ஆக்கம் எழுத்தாளரின் வகிபாகம், எழுத்தாளுகை, நூலாசிரியரின் எண்ணச் சிதறல்கள் தொடர்பில் ஆசிரியரும் பிரபல எழுத்தாளரும், பன்முக ஆளுமையாளருமான கவிதாயினி சுல்பிகா செரீப் அவர்கள் உரை நிகழ்த்தினார்.



# பள்ளிவாசலில் 200 வருட நிறைவுக்கு நாணயம் வெளியிட மன்சூர் கோரிக்கை

வரலாற்று சிறப்புமிக்க கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 200ம் வருட கொடியேற்று விழாவினை முன்னிட்டு ஞாபகார்த்த நாணயம் வெளியிடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரிடம் தேசிய காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சப்றாஸ் மன்சூர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களில் உள்ள பல்லின மக்கள் வருகை தரும் இன நல்லுறவின் அடையாளமாக திகழும் புனித தலமானது நாட்டின் பாரம்பரிய கலாசார சர்வதேச உறவுகளிலும் செல்வாக்கு செலுத்தியும் வருகின்றது.

கல்முனை கடற்கரை பள்ளிவாசலில் நடைபெற்று வரும் புனித கொடியேற்று விழாவானது அரச வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பபட்ட அரச அங்கீகாரம் பெற்ற கலாசார நிகழ்வாக முக்கிய பங்காற்றியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

எதிர்வருகின்ற ஜனவரி மாதம் ஆரம்ப பகுதியில் நடைபெற இருக்கின்ற கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் 200ம் வருட புனித கொடியேற்று விழாவினை முன்னிட்டு ஞாபகார்த்த நாணயம் வெளியிடுமாறு வேண்டியே தேசிய காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சப்றாஸ் மன்சூரினால் வரலாற்று ஆவன இணைப்புடன் கூடிய வேண்டுகோள் கடிதம் பிரதம அமைச்சரின் அலுவலகம், நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.




**மணமகன் விபரம்**

**பிறந்த திகதி** : 1988/09/29
**மதம்**: இந்து
**ஜாதி**: வேளாளர்
**நட்சத்திரம்**: பரணி
**செவ்**: இல்லை
**தொழில்** : லண்டன் PR
**எதிர்பார்ப்பு** : யாழ்ப்பாணத்தில் படித்த அழகிய பெண்

**பிறந்த திகதி** : 1987/03/02
**மதம்** : இந்து
**ஜாதி**: பள்ளர்
**நட்சத்திரம்**: உத்திரட்டாதி
**செவ்**: இல்லை
**தகைமை** : Engineer
**தொழில்**: Project Engineer
**எதிர்பார்ப்பு**: படித்த அழகிய கொழும்பு பெண்

**பிறந்த திகதி**: 1984 /03/27
**மதம்** : இந்து
**ஜாதி**: வேளாளர்
**நட்சத்திரம்**: திருவோணம்
**செவ்**: லக்கினத்தில்
**தொழில்**: சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு** : நற்குணமுள்ள பண்பான மணமகள் ( சீதணம் தேவையில்லை)

**பிறந்த திகதி**: 1985/10/08
**மதம்** : இந்து
**ஜாதி**: விஸ்வகுலம்
**நட்சத்திரம்**: பூசம் 2ம் பாதம்
**கி.பா.** 47
**செவ்** : இல்லை
**தகைமை**: B.A
**தொழில்**: ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**: பட்டதாரி மணமகள்

**மணமகள் விபரம்**

**பிறந்த திகதி**: 1994.01.04
**மதம்**: இந்து
**ஜாதி**: நளவர்
**நட்சத்திரம்**: அஸ்தம்
**செவ்**: சூரியன் செவ்வாய்
**தகைமை**: B.A
**தொழில்**:UDA
**எதிர்பார்ப்பு**: பட்டதாரி உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி**: 1992/03/15
**மதம்**: இந்து
**ஜாதி**: வேளாளர்
**நட்சத்திரம்** : பூசம்
**செவ்**: 7ல்
**தகைமை**: Physiot herapy
**தொழில்**: Physiotherapist
**எதிர்பார்ப்பு**: படித்த உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி**: 1995/03/18
**மதம்**: இந்து
**ஜாதி**: பள்ளர்
**நட்சத்திரம்**: அஸ்தம்
**செவ்**: இல்லை
**தகைமை**: College of Education
**தொழில்**: ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**: உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி**: 1991/10/07
**மதம்** : இந்து
**ஜாதி**: வேளாளர்
**நட்சத்திரம்**: உத்தராடம் 4ம் பாதம்
**செவ்** : 2 ல் சூாயன் செவ்வாய்
**தகைமை**: Msc Computer Science
**தொழில்** : விரிவுரையாளர்
**எதிர்பார்ப்பு**: உத்தியோக மணமகன்

**0776505097**
**0778876969**

**தலைமை அலுவலகம் ;**
**கனடா**
**0014166661855**

# தென்னாபிரிக்காவுக்கு திரில் வெற்றி இங்கிலாந்து அணிக்கு முதல் தோல்வி



இங்கிலாந்து அணியை 10 ஓட்டங்களால் வென்றும்கூட உலகக்கிண்ணரி-20 தொடரின் அரையிறுதி வாய்ப்பை தென்னாபிரிக்க அணி இழந்துள்ளது.

இரு அணிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னபிரிக்க அணி, 20 ஓவர்களில 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 189 ஓட்டங்களைக் குவித்தது. இதில் குயின்டன் டி கொக் 34 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க வன் டெர் டுசென் 94 ஓட்டங்களையும் ஏய்டன் மார்க்ரம் 52 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர்.

இதனை அடுத்து 190 என்ற கடினமான இலக்கை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது. இங்கிலாந்து அணி சார்பாக மொயின் அலி 37 ஓட்டங்களையும் டேவிட் மலன் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் ரபாடா கடைசி ஓவரில் ஹட்ரிக்கைப் பதிவு செய்து 3 விக்கெட்டுக்களையும், சம்ஷி, ப்ரிட்டோரியஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்க அணியின் வன் டெர் டுசென் தெரிவானார்.

இந்தப்போட்டியில் வெற்றிபெற்றபோதிலும் குழு 1 இல் 8 புள்ளிகள் பெற்ற தென்னாபிரிக்க அணி மூன்றாமிடத்தைப் பிடித்து அரையிறுதிக்கான வாய்ப்பினை இழந்துள்ளது. இந்தக் குழுவில் அதே 8 புள்ளிகளைப் பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணி நிகர ஓட்ட சராசரிப்படி அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது.

## ஆப்கானிஸ்தான் அணியுடனான டெஸ்ட் திடீரென ஒத்திவைத்தது ஆஸ்திரேலியா




ஆஸ்திரேலியா - ஆப்கானிஸ்தான் அணிகள் இதுவரை எந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் மோதியதில்லை. முதல் முறையாக இரு அணிகளுக்கும் இடையே ஹோபார்ட் நகரில் இந்த மாதம் ஒரு டெஸ்ட் போட்டியை நடத்தத் திட்டமிடப்பட்டது. இந்த நிலையில் திடீரென இந்தப் போட்டியை ஒத்திவைப்பதாக ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் நாடு தலிபான்கள் வசமாகியதன் பின்னர், கிரிக்கெட் விளையாட்டுக்கு உதவி செய்யமாட்டோம் என்று ஏற்கனவே அவர்கள் அறிவித்துள்ளனர். பெண்கள் கிரிக்கெட் அணியை தடைசெய்யப்போகிறோம் எனவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது. கிரிக்கெட் உள்ளிட்ட எந்த விளையாட்டுக்களிலும் தங்கள் நாட்டுப் பெண்கள் பங்கேற்கமாட்டார்கள் என தலிபான் மூத்த தலைவர்கள அறிவித்துள்ளனர். இதையடுத்தே ஆப்கானிஸ்தான் அணியுடனான டெஸ்ட் போட்டியை ஒத்திவைக்க ஆஸ்திரேலியா முடிவுசெய்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரிகள் சிலர் கூறுகையில், பெண்கள் கிரிக்கெட்டுக்கு ஆப்கானிஸ்தான் தடை விதித்தால் அந்த நாட்டுடன் கிரிக்கெட் விளையாடுவதில் அர்த்தம் இல்லை.

இதனால்தான் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி ஹோபார்ட் டெஸ்ட் போட்டியை ஒத்திவைத்துள்ளோம் என்றனர். ஆப்கானிஸ்தான் பெண்கள் கிரிக்கெட் அணிக்கு தடை விதித்தால், அந்த நாட்டு அணியுடனான டெஸ்ட் போட்டியை ரத்துச் செய்யத் தீர்மானித்திருக்கிறோம் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

டெஸ்ட் அந்தஸ்துப் பெறவேண்டுமானால் அந்த நாடுகளில் பெண்களுக்கான தேசிய கிரிக்கெட் அணியொன்று இருக்கவேண்டுமென்பது சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறையாகும். எனவே, ஆப்கானிஸ்தான் ஆடவர் அணியின் டெஸ்ட் எதிர்காலமும் கேள்விக் குறியாகியுள்ளது.



## மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தி அரையிறுதியில் ஆஸ்திரேலியா

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான நேற்றைய சூப்பர் 12 சுற்றுக்கான போட்டியில் ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களால் இலகு வெற்றியினைப் பதிவு செய்திருக்கின்றது.

இந்த வெற்றியுடன் ஆஸ்திரேலியா சூப்பர் 12 சுற்றில் குழு 1 இல் இரண்டாமிடம் பிடித்துள்ளதோடு, நடப்புச் சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் ஒரேயொரு வெற்றியுடன் தொடரினை நிறைவு செய்து கொள்கின்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, முதலில் துடுப்பாடும் சந்தர்ப்பத்தினை மேற்கிந்தியத் தீவுகளுக்கு வழங்கியது. மேற்கிந்தியத் தீவுகள் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பொலார்ட் 44 ஓட்டங்களையும் எவின் லூயிஸ் 29 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் ஹசல்வூட் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதன் பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 158 ஓட்டங்களை 20 ஓவர்களில் அடைவதற்கு துடுப்பாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 16.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. டேவிட் வோனர் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 89 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 53 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய அணியின் டேவிட் வோனர் தெரிவானார்.




## நான்கு நாடுகள் விளையாடவுள்ள கால்பந்தாட்டத் தொடர் இலங்கையில்

இலங்கை, பங்களாதேஷ், மாலைதீவுகள் மற்றும் சீசெல்ஸ் நாடுகள் பங்கேற்கும் கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இலங்கையில் இடம்பெறவுள்ளது.

'பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணம்' என்ற பெயரில் நடைபெறவுள்ள இந்தத் தொடரின் போட்டிகள் அனைத்தும் கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் அரங்கில் இடம்பெறும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் விளையாடும் நான்கு அணிகளும் எதிரணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் போட்டிகள் இம்மாதம் 8 ஆம், 11ஆம் மற்றும் 14ஆம் திகதிகளில் இடம்பெறும். குறித்த தினங்களில் மாலை 4 மணிக்கு முதலாவது போட்டியும் இரவு 9 மணிக்கு இரண்டாவது போட்டியும் இடம்பெறும். லீக் சுற்று நிறைவில் முதல் இரண்டு இடங்களையும் பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் மோதுவதற்குத் தகுதி பெறும்.

தொடரில் பங்கேற்கும் மாலைதீவுகள் அணி அணிகளுக்கான தரவரிசையில் 156ஆவது இடத்திலும், பங்களாதேஷ் அணி 187ஆவது இடத்திலும், சீசெல்ஸ் அணி 199ஆவது இடத்திலும் இருக்கும் அதேவேளை இலங்கை அணி 204ஆவது இடத்தில் உள்ளன. இந்தத் தொடரில் இடம்பெறும் போட்டிகளில் வெற்றிகளைப் பெறும் பட்சத்தில் இலங்கைக் கால்பந்தாட்ட அணிக்கு பீபா தரப்படுத்தலில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தடை செய்யப்பட்ட தொழில் முறையை கட்டுப்படுத்த எந்த விதமான பாராபட்சங்களும் காட்டக்கூடாது!

## அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் கண்டிப்பான உத்தரவு





வளமான எதிர்காலத்தை எமது மக்களுக்கு ஏற்படுத்துவதே நோக்கமாக இருக்கின்ற போதிலும், சட்ட விரோத செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னாருக்கான விஜயத்தை நேற்று (சனிக்கிழமை) மேற்கொண்ட கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா, கடற்றொழிலாளர் சங்கப் பிரதிகள் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்ட விரோத தொழில் முறைகள் உட்பட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

சட்ட விரோத தொழில்முறைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியமெனவும் வலியுறுத்தினார்.

மேலும், நாடளாவிய ரீதியில் சுருக்கு வலை தடை செய்யப்பட்டுள்ள போதிலும், குறித்த தொழில் முறைகள் தொடர்பான புதிய ஒழுங்கு விதிகள் வெளியிடப்படும் வரையில் 3 இஞ்சிக்கும் குறையாத அளவு கண் வலைகளைப் பயன்படுத்தி 16 மைல்களுக்கு அப்பால் சுருக்கு வலை தொழிலை தற்காலிகமாக மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

அதேபோன்று கரைவலைத் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் வின்ஞ் எனப்படும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதும் நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு, தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதற்கு கடற்படை, பொலிஸார் மற்றும் கடற்படையினரின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் எமது மக்களுக்குத் தேவையற்ற அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக இந்த வழிமுறையைத் தவிர்த்து வருகின்றேன். எனவே, கடற்றொழிலாளர்கள் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

மேலும், தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதில் எந்த விதமான பாராபட்சங்களும் காட்டக் கூடாது என்று கடற்றொழில் திணைக்களப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடமை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுமானால் தனக்கு அறியத் தருமாறும் அவ்வாறானவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தமையுடன், புனரமைக்கப்பட வேண்டிய கடற்றொழில் வீதிகள் தொடர்பான பட்டியலை முன்னுரிமை அடிப்படையில் வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், முசலி போன்ற பிரதேசங்களில் ஏற்படுகின்ற கடலரிப்பைத் தடுத்தல், கடலட்டை பண்ணை அமைக்க விரும்புகின்றவர்களுக்கு இடங்களை ஒதுக்குதல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் பரிதாபச் சாவு

**சாவகச்சேரி நிருபர்**

சாவகச்சேரி–நுணாவில் பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி அன்றிரவே யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீதியால் நடந்து சென்றவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நபர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மட்டுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 60வயதான கந்தையா லோகநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்..

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான காட்டு யானை புத்தளத்தில் சாவு

புத்தளம், கருவலகஸ்வெள, கல்விலபூங்காவில்காயங்களுக்குள்ளான நிலையில் காட்டு யானை ஒன்று உயிரிழந்ததாக கருவலகஸ்வெள வனஜீராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். குறித்த காட்டு யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயங்களுக்குள்ளாகிய நிலையில் காணப்பட்டுள்ளது. கடந்த மூன்று நாள்களுக்கு முன் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த பகுதிக்குச் சென்று யானையை பார்வையிட்டுள்ளனர். இதன்போது, நிகாவெரிட்டிய மிருக வைத்தியர் வரவழைக்கப்பட்டு யானைக்கு 3 நாள்களாக சிகிச்சையளித்து வந்துள்ளனர்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி குறித்த யானை உயிரிழந்ததாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். உயிரிழந்த காட்டு யானை 25 வயதுடையது என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பனம் விதை நடுகை திட்டம்









சேவ் எ லைப் அமைப்பால் வடமாகாணத்தில் ஒரு லட்சம் பனை மரங்களை மீளுருவாக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக பரமன்கிராய், பூநகரி பகுதியில் ஆயிரம் பனை மரக்கன்றுகளும் விதைகளும் பரமன்கிராய் கமக்கார அமைப்பின் ஒத்துழைப்புடன் இளைஞர்களால் நடப்பட்டது.

இதற்கு முதல் ஞானிமடம், பூநகரி பகுதியில் ஆயிரம் பனை மர கன்றுகள் நடப்பட்டிருந்தன. கரையோர பிரதேசத்தில் விவசாய நிலங்கள் இருக்கின்றமையால் உப்பு காற்றைத் தடுக்கும் வகையில் இந்தப் பனைமரங்கள் நடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2021இல் வெளியிடப்பெற்றது.